பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

19 03 2024 **TUESDAY** **6.45 AM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மக்களவைத் தேர்தலுக்கான கூட்டணியை இறுதி செய்வதில், தமிழக அரசியல் கட்சிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.
- தமிழகத்தின் தேர்தல் முடிவுகள் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தும் வகையில் அமையும் என்று பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- அனைவருக்கும் வீடு என்ற மத்திய அரசின் உத்தரவாதம் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை என்று காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.
- மக்கள் பணி செய்வதற்காகவே ஆளுநர் பதவியை ராஜினாமா செய்துள்ளதாக திருமதி தமிழிசை சௌந்தரராஜன் கூறியுள்ளார்.
- சுவிஸ் ஓபன் பேட்மிண்டன் போட்டித்தொடர் **Basel** நகரில் இன்று தொடங்குகிறது.

------ *இனி விரிவான செய்திகள்* --

**<<<<<<>>>>>**

தமிழகத்தில் மக்களவைத் தேர்தல் அடுத்த மாதம் 19-ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், அரசியல் கட்சிகள், கூட்டணியை இறுதி செய்வது, வேட்பாளர்களை அறிவிப்பது போன்ற நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

திமுக கூட்டணியை பொறுத்தவரை அனைத்து கட்சிகளுக்கும் தொகுதி பங்கீடு நிறைவடைந்துள்ளது.

அந்த கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகள், வேட்பாளர்களை அறிவித்து வருகின்றன.

இதேபோல், அஇஅதிமுக கூட்டணியை பொறுத்தவரை இன்னமும் கட்சிகளுக்கான தொகுதி பங்கீடு நிறைவடையவில்லை.

பிஜேபி கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளும் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையை இன்னமும் தொடர்ந்து கொண்டுள்ளது.

தமிழகத்தில் நாளை வேட்புமனு தாக்கல் தொடங்கவுள்ள நிலையில், மாநிலம் முழுவதும் வாக்குப்பதிவை அமைதியாகவும், நேர்மையாகவும் நடத்துவது குறித்து அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்களுடன், மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திரு சத்தியப்பிரதா சாஹூ நேற்று ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் வாக்குப்பதிவுக்கான ஏற்பாடுகளை முழுவீச்சில் மேற்கொள்ளுமாறு அவர் அறிவுறுத்தினார்.

இதனிடையே, தமிழகத்தில் அரசியல் கட்சிகளின் தொகுதி பங்கீடு ஓரிரு நாட்களில் நிறைவடைந்து, வேட்பாளர்கள் அறிவிக்கப்படுவார்கள் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

திமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி, நாமக்கல் தொகுதியில் அதன் இளைஞர் அணி செயலாளர் திரு சூரியமூர்த்தி போட்டியிடுவார் என அறிவித்துள்ளது.

இந்நிலையில், மக்களைத் தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்யும் வகையில், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்ற முதல் முறை வாக்காளர்கள், இந்த தேர்தலில் வாக்களிப்பதை ஆவலுடன் எதிர்நோக்கியிருப்பதாக தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் - மாணவிகள் - 43 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

தேர்தல் நடத்தை நெறிமுறைகள் அமலுக்கு வந்ததையடுத்து, காஞ்சிபுரம் மாவட்டத்தில் துப்பாக்கி உரிமம் வைத்திருந்த 133 பேர் அதனை ஒப்படைத்துள்ளதாக காவல்துறை கண்காணிப்பாளர் திரு சண்முகம் கூறியுள்ளார்.

நேற்று காஞ்சிபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - சண்முகம் - 30 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

தமிழகத்தின் தேர்தல் முடிவுகள் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தும் வகையில் அமையும் என்று பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூரில் நேற்று தமது தேர்தல் பிரச்சார வாகன பேரணி குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், மாநிலம் முழுவதும் பிஜேபி வலுவான சக்தியாக உருவாகி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 1998-ஆம் ஆண்டு நிகழ்ந்த கோவை தீவிரவாத குண்டுவெடிப்புகளை மறக்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

அந்த தாக்குதலின்போது உயிரிழந்தவர்களுக்கு தமது பயணத்தின்போது அஞ்சலி செலுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கோவை வாகன பேரணியின்போது மக்கள் தமது மனதை வென்றுவிட்டதாகவும், பல ஆண்டுகள் இந்த பேரணி நினைவில் நிற்கும் என்றும் திரு நரேந்திர மோடி பதிவிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

அனைவருக்கும் வீடு என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் உத்தரவாதம் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை என்று காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், காங்கிரஸ் ஆட்சியின்போது வழங்கிய வீடுகளை காட்டிலும், கடந்த பத்தாண்டுகளில் குறைவான வீடுகளையே பிஜேபி அரசு கட்டிக்கொடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

நகர்ப்புற பகுதிகளில் ஆறு லட்சத்து 50 ஆயிரம் செலவில் கட்டப்படும் வீடுகளுக்கு மத்திய அரசு ஒன்றரை லட்சம் ரூபாய் மட்டுமே வழங்குவதாகவும், இதர தொகை மாநில அரசுகள் மற்றும் நகராட்சிகளால் வழங்கப்படுவதாகவும் திரு கார்கே தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

குடிமைப்பணி அதிகாரிகள் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில், குடிமைப்பணி பயிற்சி அதிகாரிகள் இடையே உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

திறன் மிகு நிர்வாகத்திற்கு தொழில்நுட்பங்கள் உதவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

பருவநிலை மாற்றம், புவி வெப்பமயமாதல் போன்ற சவால்களை எதிர்கொள்வதற்கு புதுமை கண்டுபிடிப்புகளுடன் கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

மக்கள் பணி செய்வதற்காகவே ஆளுநர் பதவியை ராஜினாமா செய்துள்ளதாக திருமதி தமிழிசை சௌந்தரராஜன் கூறியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமது ராஜினாமாவை குடியரசுத் தலைவர் ஏற்றுக்கொண்ட பின்னர் அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து தெரிவிக்கப்படும் என்றார்.

<<<<<<>>>>>

*இருவரிச்செய்திகள்*

காஸாவில் உள்ள **Rafah** என்ற இடத்தில் இஸ்ரேல் நடத்திய தரைவழி தாக்குதலுக்கு அமெரிக்க அதிபர் திரு ஜோ பைடன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தான் ராணுவத்தினர் நடத்திய வான்வழி தாக்குதலில், எட்டு பேர் உயிரிழந்தனர்.

<<<<<<>>>>>

தென்கொரியா சென்றுள்ள அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஆன்டனி பிளிங்கன், சியோலில் அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு **'Cho Tae – Yul '** –ஐ சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தினார்.

<<<<<<>>>>>

இந்தியா – **Scychelles** இடையிலான பத்தாவது கூட்டு ராணுவ பயிற்சி நேற்று தொடங்கியது.

<<<<<<>>>>>

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அருகே பாலூர் என்ற இடத்தில் தேர்தல் பறக்கும் படையினர் நடத்திய வாகன சோதனையில் உரிய ஆவணம் இன்றி கொண்டுசெல்லப்பட்ட 81 ஆயிரத்து 500 ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது.

<<<<<<>>>>>

ராமநாதபுரம் - மதுரை தேசிய நெடுஞ்சாலையில் தேர்தல் பறக்கும் படையினர் நடத்திய வாகன சோதனையின்போது, பரமக்குடி நான்குவழிச்சாலை அருகே டி.நல்லூரில் ஆவணம் இன்றி எடுத்துச்செல்லப்பட்ட ஒரு லட்சத்து 94 ஆயிரம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது.

<<<<<<>>>>>

மக்களவைத் தேர்தலை முன்னிட்டு, கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கூடுதல் கண்காணிப்புப்பணிகளை மேற்கொள்ள ஏதுவாக, சிறப்பு அதிரடிப்படையினருக்கான வாகனங்களை மாவட்ட ஆட்சியர் திரு ஷர்வன்குமார் நேற்று கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

<<<<<<>>>>>

தென்காசியில் மாவட்ட ஆட்சியர் திரு கமல் கிஷோர் தலைமையில், திருமண மண்டப உரிமையாளர்கள், அச்சக உரிமையாளர்கள், விடுதிகள் மற்றும் நகை அடகு கடை நடத்துவோர் பங்கேற்ற தேர்தல் நடத்தை நெறிமுறைகள் தொடர்பான ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

<<<<<<>>>>>

விழுப்புரம் மாவட்டத்தில் பதற்றமான வாக்குச்சாவடிகள் குறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தீவிர கண்காணிப்பில் ஈடுபட வேண்டும் என மாவட்ட ஆட்சியரும், தேர்தல் நடத்தும் அலுவலருமான திரு பழனி கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>

தூத்துக்குடி மாவட்டத்தில் பணியாற்றும் மாவட்ட நிலையிலான அலுவலர்கள் மக்களவைத் தேர்தல் முடியும்வரை அனுமதியின்றி மாவட்டத்தை விட்டு வெளியே செல்லக்கூடாது என மாவட்ட ஆட்சியரும், தேர்தல் நடத்தும் அலுவலருமான திரு லட்சுமிபதி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

அம்மாவட்டத்தில் அரசு கட்டிடங்கள் மற்றும் சுவர்களில் வரையப்பட்டுள்ள அனைத்து விளம்பரங்களையும் இன்று மாலைக்குள் அகற்ற வேண்டும் என திரு லட்சுமிபதி அறிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

ஆசிய வளர்ச்சி வங்கியின் தலைவர் திரு **'Bhargav Das Gupta** –வை, நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் புதுதில்லியில் நேற்று சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

இந்தியாவில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சித் திட்டங்களை மேலும் மேம்படுத்துவது குறித்து அப்போது இருவரும் கருத்துக்களை பரிமாறிக்கொண்டனர்.

இந்தியாவின் வளர்ச்சியில் தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் பங்களிப்பு குறித்தும் அவர்கள் ஆலோசனை நடத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சுவிஸ் ஓபன் பேட்மிண்டன் போட்டிகள் ஸ்விட்சர்லாந்தின் **Basel** நகரில் இன்று தொடங்குகிறது.

வரும் 24–ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இப்போட்டியின்ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் லக்ஷயா சென் முதல் சுற்றில், மலேசியாவின் **Leong Jun Hao-'**ஐ எதிர்கொள்கிறார்.

மற்றொரு இந்திய வீரர் கிடாம்பி ஸ்ரீகாந்த் - தைவானின் **'Wang Tzu – Wei –**ஐ எதிர்கொள்கிறார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் பி வி சிந்து, ஜெர்மனியின் **'Yvonne Li '** –ஐ எதிர்கொள்கிறார்.

மகளிர் இரட்டையர் பிரிவில் அஷ்வினி பொன்னப்பா – தனிஷா காஸ்ட்ரோ இணை, இந்தோனேஷிய இணையை எதிர்கொள்கிறது.

**<<<<<<>>>>>**

மியாமி ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு தகுதிச்சுற்று ஆட்டத்தில், இந்தியாவின் சுமித் நாகல் வெற்றிபெற்றார்.

நேற்று நடைபெற்ற இப்போட்டியில் கனடாவின் **‘Gabriel Diallo’**-வை 7-6, 6-2 என்ற செட்டுகளில் வென்றார்.

**<<<<<<>>>>>**